DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.54/2025
Prosecution Witness P.W.2

Name : **திரு.பிரின்ஸ் டேனியல்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 03.02.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**<u>முதல் விசாரணை</u>**

1. நான் 2019-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு வனத்துறையில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் உத்தமபாளையம் வன சரக அலுவலகத்தில் தேவாரம் பிரிவில் வனவராக பணிபுரிந்து வந்தேன் சம்பவ இடமான தேவாரம் சங்கராபுரம் புலிக்குத்தி காப்பு நிலம் என்பது எனது எல்லைக்குட்பட்ட பகுதியாகும். 04.09.2024 ம் தேதியன்று நான் வழக்கம் போல எனது எல்லைப் பகுதியில் குச்சனூரில் இருந்து சங்கராபுரம் நோக்கி இரவு சுமார் 8.00 மணியளவில் நான் சென்று கொண்டிருந்தேன்.

2. சங்கராபுரம் பகுதியில் எங்கள் காப்பு நிலம் ஆரம்பிக்கும் பகுதியில் மூன்று பேர் சாலையில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை நான் பார்த்து விலங்குகள் இந்த பகுதியில் நடமாடும் பகுதி என்பதால் அங்கு நிற்க வேண்டாம் என்றும், அந்த இடத்திலிருந்து செல்ல வேண்டும் என்று நான் அறிவுரை சொன்னேன். அவ்வாறு நான் பார்த்த நபர்களில் ஒருவர் தான் மறுநாள் பார்த்த இறந்து போனவர் அவருடன் ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் நபர் நின்று கொண்டிருந்தார். அவர்கள் யார் என்று என்னால் தற்போது அடையாளம் சொல்ல முடியும். நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ள எதிரிகள் 1 மற்றும் 2 சாட்சி

அடையாளம் காட்டி அவர்கள் தான் அன்றைய தினம் அந்த இடத்தில் இறந்து போனவருடன் பார்த்ததாக தெரிவிக்கிறார்.

3. நான் ரோந்து பணியில் இருந்து பார்த்துவிட்டு அங்கிருந்து கிளம்பி சென்று விட்டேன். மறுநாள் இரவு சங்கராபுரம் வனக்காப்பாளர் அ.சா.1. சங்கிலிராஜா எனக்கு போன் செய்து சங்கராபுரம் புலிக்குத்தி பகுதியில் ஒரு அடையாளம் தெரியாத ஆண் பிரேதம் ஒன்று இருப்பதாக என்னிடம் தெரிவித்தார் அவர் தகவல் சொல்லி ஒரு அரை மணி நேரத்தில் நான் அந்த இடத்திற்கு விரைந்து சென்றேன். அந்த இறந்து போன நபரை அங்கு பார்த்துவிட்டு சின்னமனூர் காவல் நிலையம் வருகிறது என்ற விவரத்தை தெரிந்து கொண்டு நானும் சங்லி ராஜாவும் சின்னமனூர் காவல் நிலையத்திற்கு சென்று சங்கிலிராஜா புகார் கொடுத்தார்.

4. அந்த இறந்து போன நபரை தற்போது புகைப்படத்தை காட்டினால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் என்னிடம் காண்பிக்க கூடிய அ.சா.ஆ.1–ல் இருப்பது போல் தான் இறந்து போனவர் சம்பவ இடத்தில் அவரது பிரேதம் இருந்தது. அவர் அந்த சமயத்தில் அணிந்திருந்த உடைகளையும் என்னால் அடையாளம் சொல்ல முடியும் அந்த உடைகள் தான் சா.பொ.1 மற்றும் 2. பிரேதத்தை எங்கள் வனப்பகுதியில் இருந்து போலீசார் வெளியேற்றும் வரை அந்த இடத்தில் நாங்கள் இருந்தோம். பிரேதத்தை போலீசார் அங்கிருந்து ஆம்புலன்ஸில் ஏற்றிச் சென்றார்கள்.

5. இது சம்பந்தமாக உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் முன்பு நான் வாக்குமூலம் அளித்துள்ளேன். அவர்கள் நின்று கொண்டிருக்கும் பொழுது TN 78 E 5801 என்ற வண்டி இருந்தது. இரவு நேரம் என்பதால் அதன் வண்டியின் நிறம் நான் சரியாக கவனிக்கவில்லை. மேற்கண்ட வாகனம் நின்று கொண்டிருந்தது. அந்த இருசக்கர வாகனத்தை காட்டினால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் என்னிடம் காண்பிக்கக்கூடிய புகைப்படத்தில் காணப்பட்டுள்ள இருசக்கர வாகனம் தான் அந்த இருசக்கர வாகனம் மேற்கண்ட

இருசக்கர வாகனம் தற்பொழுது காவல் நிலைய கட்டுப்பாட்டில் உள்ளது. அது காணொளி காட்சி வாயிலாக ஆஜர் செய்யப்பட்டு இருசக்கர வாகனம் சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் புகைப்படம் அ.சா.ஆ.3.

6.நீதித்துறை நடுவர் முன்பு நான் வாக்குமூலம் அளித்துள்ளேன். என்னிடம் காண்பிக்க கூடிய வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான், அந்த கையெழுத்து அ.சா.ஆ.4. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார். எங்கள் அலுவலகத்தில் நான் பராமரித்து வரும் டைரி பதிவேடுகளை ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் வழங்கினேன். அந்த பதிவேடு நகல் அ.சா.ஆ.5.டா இது சம்பந்தமாக சிறையில் நான் பார்த்த மூன்று நபர்களில் சிறையில் ஒரு நபரை மட்டும் நான் அடையாளம் காட்டினேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. நான் அன்றைய தினம் அலுவல் பணியாக எனது அலுவலகத்தில் இருந்து கிளம்பும்போது எனது அலுவலகத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் அன்றைய தினம் நான் அலுவலகத்தில் இல்லை முழுவதும் பீல்டு விசிட்டாகத்தான் செய்து கொண்டிருந்தேன். காலை 9.00 மணியிலிருந்து நான் பீல்டு விசிட்டில் தான் இருந்தேன். மாலை 6.00 மணி வரை அவ்வாறு ஃபீல்டு விசிட்டில் தான் இருந்தேன். என்ன பணிக்கு செல்கிறார் என்ற விவரத்தை புகார்தாரரும் டைரியில் குறித்து விட்டு செல்வார் என்றால் சரிதான். படைக்கலன்களை எடுத்துச் சென்ற விபரங்களை டைரியில் குறித்துக் கொள்வது கிடையாது.03.01.2024 ஆம் தேதியன்று ரோந்து பணிக்கு படைக்கலனை எடுத்துச் சென்றது தொடர்பாக டைரியில் குறித்துள்ளோம்.

2. பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும்போது ஆயுதங்களை எடுத்துச் செல்லும் விபரத்தை குறிப்பது கிடையாது. எங்களுக்கு குறிப்பிட்ட நேரம் அலுவலக பணி கிடையாது. அன்றைய தினம் ரேஞ்சர் எந்த இடத்திற்கு எங்களை பணிக்குச் செல்ல பணிக்கிறாரோ அந்த இடத்திற்கு நாங்கள்

செல்வோம் குறிப்பிட்ட இடம் என்று கிடையாது. நான் எனது வீட்டிற்கு 6.00 மணிக்கு சென்று விட்டேன் நான் உடைகளை மாற்றிக் கொண்டு குளித்துவிட்டு சாப்பிட்டுவிட்டு அதன் பிறகு 7.30 மணியளவில் எனது நான் பீல்டு விசிட்–க்கு வந்தேன். அன்றைய தினம் நான் இரவு பணிக்கு டார்ச் லைட் எதுவும் எடுத்துச் செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் வந்த Guard டார்ச் லைட் எடுத்து வந்தார். அன்றைய தினம் நாங்கள் மூன்று பேர் சென்றோம். போலீசார் விசாரணையில் இது பற்றி விவரங்களை நான் சொல்லியுள்ளேனா என்றால் நான் முன்பே வந்து விட்டேன், மற்ற மூன்று பேர் எனக்கு பின்னால் வந்தார்கள்.

3. சம்பவயிடமானது இரண்டு பக்கமும் வளைவான பகுதி மேடு பள்ளம் உள்ள பகுதி என்றால் சரிதான். மின்விளக்கு அற்ற பகுதி என்றாலும் சரிதான், ஒரு சிக்னல் மட்டும் லேம்ப்போஸ்ட் உள்ளது. சம்பவம் நடந்த இடத்திற்கும் நான் எதிரிகளை பார்த்த இடத்திற்கும் சற்று தூரம் அதிகம் உள்ள பகுதி. சுமார் 150 மீட்டர் தூரம் இருக்கும். 150 மீட்டர் தூரம் என்பது லேம்ப் இருக்கும் இடத்திலிருந்து அவர்களைப் பார்த்த இடத்தை நான் குறிப்பிடுகிறேன்.

4. சம்பவ இடத்திலிருந்து அவர்களைப் பார்த்த இடம் சுமார் 30–40 மீட்டர் தூரம் இருக்கும். அவ்வாறு மூன்று நபர்களில் ஒரு நபர் அரை நிர்வாணமாக இருந்தார் என்றால் முண்டா பனியன் மற்றும் வேஷ்டி அணிந்திருந்தார். அவர்கள் நின்று கொண்ட இந்த இடத்திற்கு பின்னால் வண்டி நின்று கொண்டிருந்தது. அவர்கள் நின்று கொண்டிருந்த இடம் என்பது வனப்பகுதி கிடையாது அது சாலை என்பதால் அவர்களை அந்த இடத்திலிருந்து நான் செல்லுமாறு தான் அறிவுரை சொன்னேனே தவிர அவர்கள் யார் என்ற விபரத்தை நான் விசாரணை செய்து தெரிந்து கொள்ளவில்லை. சங்கராபுரத்திலிருந்து கீழே வருமபோது எத்தனை பாலங்கள் உள்ளதென்றால் என்று ஆரல் கிராஸிங் அருகில் இரண்டு பாலங்கள் அமைந்துள்ளது. கீழே இருந்து மேலே வரும்போது சம்பவ இட பாலம் என்பது 3 வது பாலம் என்றால்

சரியல்ல. ஆரல் லிமிட் இடத்தில் அது இரண்டாவது பாலம் தான். ஒட்டுமொத்தம் எத்தனை பாலங்கள் உள்ளது என்ற விவரம் எனக்கு குறிப்பிட்டு தெரியாது.

5. நான் சொல்வது போல் இரண்டாவது பாலத்தில் தான் அவர் காயம்பட்டு இல்லை என்றும், மூன்றாவது பாலத்தின் அருகில் தான் அவர் காயம்பட்டு இருந்தார் என்றால் சரியல்ல. சம்பவம் இடத்திற்கும், இறந்து போனவர் இருந்த இடத்திற்கும் சுமார் 30 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. 100 மீட்டர் தூரம் இருக்கும்.. சாலையில் இருந்து பிரேதம் இருந்த இடம் சுமார் 15 மீட்டர் தூரத்தில் இருக்கும். அது வனக்காப்பாளர் டார்ச் அடித்தவுடன் அவருக்கு பிரேதம் இருந்த விபரம் தெரிந்தது.. குறிப்பிட்டு டார்ச் அடித்து பார்த்தால் மட்டுமே தெரியும் என்றும், பொத்தாம் பொதுவாக பார்த்தால் தெரியாது என்றால் சரியல்ல. விளக்கு வெளிச்சத்தில் பார்த்தால் தெரியும். எனக்கு இரவு 08.00–08.300 மணியளவில் ஃபோன் செய்து சொன்னார்.

6. நான் அந்த சமயம் எனது வீட்டிலிருந்து அரை மணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்தேன்.எனக்கு புகார்தாரரிடமிருந்து தகவல் வந்த பிறகு உடனடியாக நான் எனது ரேஞ்சருக்கு உடனே போன் வாயிலாக தகவல் சொன்னேன். நான் போலிசாருக்கும் தகவல் சொல்லவில்லை, நம்பர்–100 போலீசுக்கும் போன் செய்து தகவல் சொல்லவில்லை நான் சங்கிலி ராஜாவிடம் இது சின்னமனூர் எல்லைக்குட்பட்ட பகுதி என்றும், சின்னமனூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுங்கள் என நான் சொன்னேன் போலீசார் சம்பவத்திற்கு வரும் பொழுது இரவு 09.00 மணியிலிருந்து 10.30 மணி இருக்கும். அவ்வாறு முதல் நாள் நின்று கொண்டிருந்த மூன்று நபர்களிடம் அவர்களது பெயர் விலாசம் கேட்டு நான் எனது பாக்கெட் டைரியில் எழுதிக் கொள்ளவில்லை என்றால் சரிதான். அவர்கள் சாலையில் நின்று கொண்டிருந்ததால் அவர்கள் குறித்து நான் அன்றைய தினம் விசாரணை எதுவும் செய்யவில்லை.

7. நான் ஒரு அரசு அதிகாரி என்பதால் மூன்று நபர்கள் இரவு நேரங்களில் நின்று கொண்டிருக்கும்போது ஒரு நபர் அரை நிர்வாணமாக வேஷ்டி பனியன் மட்டுமே அணிந்திருந்த சமயத்தில் அவர்களை விசாரித்து அவர்கள் விபரங்கள் நான் தெரிந்து இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நானும், சங்கிலி ராஜாவும் காவல் நிலையத்திற்கு இரவு 9.00 மணியிலிருந்து 9.30 மணிக்குள் சென்றிருப்போம். அந்தப் புகாரை நான் எழுதவில்லை. சங்கிலி ராஜா தான் புகார் எழுதினார். நான் சாட்சி கையெழுத்தும் போடவில்லை. நான் உண்மையிலே சென்றிருந்தால் சாட்சி கையெழுத்து போட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

8. புகார் யாரிடம் கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் உதவி ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்டது. நான் காவல் நிலையத்தில் சுமார் கால் மணி நேரம் அரை மணி நேரம் இருந்திருப்பேன். நான் சம்பவ இடத்தில் பார்த்த மூன்று பேரும் அவர்களுக்கிடையே சண்டை சச்சரவு எதுவும் போட்டுக் கொள்ளாமல் அமைதியாக தான் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான் நான் சொல்வது போல் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும், பணியில் நான் இல்லை என்றால் சரியல்ல. நான் எந்த பணிக்கு செல்கிறேன் என்ற விபரத்தை எனது அலுவலகத்தில் குறிப்பிட்டு விட்டு தான் செல்வோம் என்றால் சரியல்ல. முன்னமே அவ்வாறு குறிப்பிடுவது கிடையாது. உண்மையிலேயே பணியில் இருந்திருந்தால் அது சம்பந்தமான ஆவணங்களை போலீஸ் விசாரணை குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. எங்கள் வன சரக்கத்திற்குள் ஏதேனும் குற்ற நிகழ்வு நடந்தால் அதை உடனே எங்கள் மேலதிகாரிகளுக்கு தெரிவிப்பது வழக்கம் என்றால் சரிதான். அதை தனி அறிக்கையாகவும் சமர்ப்பிப்பது வழக்கம் என்றால் சரிதான். நான் இது சம்மந்தமாக சிறையில் 1 நபரை மட்டும் நான் அடையாளம் கட்டினேன். நான்

எதிரிகளிடம் ஒரு நிமிடம் கூட அந்த இடத்தில் நின்று பேசவில்லை அவர்களிடம் எச்சரித்துவிட்டு சென்றுவிட்டேன்.

9. பொதுவாக வனத்திற்குள் தொழுமாடுகள் தாக்கப்படும் பொழுது இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வயலட் லைப் காண்கிலீட் ஏற்படும் போது இறப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. மாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையைச் சார்ந்த கொம்புகள் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை அன்றைய தேதி தவிர என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல, பத்தாம் தேதி என்னை விசாரித்து வீடியோ வாக்குமூலம் வாங்கியுள்ளார்கள். காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த அன்று என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வைத்து போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான்.. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அரசு அதிகாரி என்பதால் அதற்கு ஒத்து நான் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.. அந்த பகுதியில் மொத்தம் மூன்று பாலங்கள் உள்ளது என்றும் மறைத்து நான் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.03 18:37:01 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.